DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT (FTC), THENI

SC. No. 32/2021

Deposition of Witness : PW6

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | அரவிந்த கிருஷ்ணன் | த/பெயர் | : பாலகங்காதரன் |
| ஊர் : | முத்துத்தேவன்பட்டி | தாலுகா | : தேனி |
| சாதி : | -- | தொழில் | :தனியார் வேலை |
| மதம் : | இந்து | வயது | :72/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.08.2022

---

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

நான் முத்துத்தேவன்பட்டியில் வசிக்கிறேன் . தேனி ராஜா தங்கும் விடுதியில் மேலாளராக பணிபுரிகிறேன். எதிரிகள் அன்பு (எ) அன்பு கணேஷ், செந்தில்குமார் என்ற வெள்ளை செந்தில்குமார் ஆகியோரை எனக்கு அடையாளம் தெரியாது . சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு நான் தேனி ராஜா லாட்ஜில் இருந்தேன் . போலீசார் எங்களது தங்கும் விடுதிக்கு வந்தனர் . மகாராஜன் என்பவர் தங்கியிருக்கிறாரா என்று கேட்டார். நான் தங்கும் விடுதியில் பராமரித்து வரும் பேரேட்டை பார்த்தேன் . மகாராஜன் எங்களது தங்கும் விடுதியில் தங்கி இருந்ததாக பதிவு இருந்தது . எங்களது விடுதியில் இருந்து அறையை காலிசெய்து போய்விட்டார் என்று சொன்னேன். நான் பராமரித்து வந்த பேரேட்டை போலீசார் என்னிடம் இருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டனர் . போலீசார் என்னிடம் கைப்பற்றி சென்ற பேரேடு எங்களது தங்கும் விடுதிக்குரிய பேரேடு ஆகும் . பேரேட்டில் கடந்த 06.08.2019 ம்

தேதி அறை எண் 211 மகாராஜன் என்பவருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது . எங்களது பேரேட்டின்படி மகாராஜன் என்பவர் 08.08.2019 ம் தேதி எங்களது விடுதியை விட்டு காலி செய்து போயிருக்கிறார் . மீண்டும் 09.08.2019 ம் தேதியில் அறை எண் 211 மகாராஜன் பெயரில் ஒதுக்கப்பட்டிருக்கிறது . 10.08.2019 ம் தேதி விடுதியை காலி செய்துவிட்டு போனதாக குறிப்பு இருக்கிறது . எங்களது விடுதியில் பராமரிக்கப்பட்டு வந்த பேரேடு **அ.சா.ஆ.5** ஆகும். எதிரிகள் அன்பு என்ற அன்பு கணேஷ் , செந்தில்குமார் என்ற வெள்ளை செந்திலை பற்றி எனக்கு எதுவும் தெரியாது .

**(அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டபடி பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டது.)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

காவல் ஆய்வாளர் விசாரணையில் 29.02.2020 ம் தேதி அதிகாலை 2.45 மணிக்கு எதிரி மகாராஜனை அழைத்து வந்து மகாராஜன் பெயரில் ஒதுக்கப்பட்டிருந்த அறையில் கன்னியாகுமரி மாவட்டம் வடசேரியை சேர்ந்த ஜெயச்சந்திரன் மகன் செந்தில்குமார் என்ற வெள்ளை செந்தில்குமாரும் , விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையை சேர்ந்த அன்பு என்ற அன்பு கணேஷ் தங்கியிருப்பதாக சொன்னதாகவும், ஆய்வாளர் செந்தில் என்ற வெள்ளை செந்தில்குமாரை விசாரிக்க தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், காவல் ஆய்வாளர் மடிக்கணினியில் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், மகாராஜனின் மகன் தேவா என்ற தெய்வேந்திரன் அவர்களுக்கு நன்பர் என்றும், தேவா என்ற தெய்வேந்திரன் அவரது அக்கா சிதராவின் கணவரை கொலை செய்யவேண்டும் என்று சொன்னதாகவும், எதிரிகள்

ஒப்புக்கொண்டதாகவும் அதனால் தேவா என்ற தெய்வேந்திரன் அன்பு கணேஷ்யையும், செந்தில்குமாரையும் சித்ராவின் கணவர் செல்லப்பாண்டியை கொலை, மகாராஜனை சந்திக்க அனுப்பி வைத்ததாகவும் கடந்த 06.08.2019 ம் தேதி ராஜா லாட்ஜில் செல்லப்பாண்டியை கொலை செய்ய திட்டம் தீட்டியதாகவும் , கொலை செய்ய 5 லட்சம் கூலி கொடுக்கவேண்டும் என்று பேசி முன் பணமாக ரூ.65 ஆயிரம் பெற்றுக்கொண்டதாகவும் , 08.08.2019 ம் தேதி சக்திவேல் என்பவர் செல்லப்பாண்டியை ராமநாதபுரத்திற்கு அழைத்து வந்ததாகவும் , செல்லப்பாண்டியை ஒப்படைத்தவுடன் சக்திவேல் , தினேஷ், அன்பு என்ற அன்பு கணேஷ் , கிஷோர் நாகராஜன், செந்தில் என்ற வெள்ளை செந்தில்குமார்ஆகியோர் சேர்ந்து செல்லப்பாண்டியை கொலை செய்து எரித்து புதைத்து விட்டதாக கூறியதாகவும் , அவரை கூட்டிச்சென்றால் புதைத்த இடத்தை அடையாளம் காட்டுவதாகவும் , தன்னிடம் இருந்த கத்தியை ஆய்வாளரிடம் ஒப்படைத்ததாகவும் , ஆய்வாளர் கத்தியை மகஜரில் கைப்பற்றியதாகவும் கூறியிருக்கிறேன் என்றால் தவறு . எதிரிகள் எனக்கு வேண்டியவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் தவறு.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

மனுவின் மீது குறுக்கு விசாரணை நிறுத்திவைக்கப்பட்டது .

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டது. அவரால் சரி என் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது |
| கூடுதல் மாவட்ட விரைவு நீதிபதி<br>தேனி |

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT (FTC), THENI

SC. No. 32/2021

Deposition of Witness : PW7

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | பிச்சைமணி | த/பெயர் | : கருப்பையா |
| ஊர் : | முத்துத்தேவன்பட்டி | தாலுகா | : தேனி |
| சாதி : | -- | தொழில் | :தனியார் வேலை |
| மதம் : | இந்து | வயது | :70/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.08.2022

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

நான் தேனி நகரம் பங்களா மேட்டில் குடியிருக்கிறேன் . சாட்சி அரவிந்த கிருஷ்ணனை தெரியும். சாட்சி அரவிந்த கிருஷ்ணனும், நானும் தேனியில் உள்ள ராஜா லாட்ஜில் வேலை செய்கிறோம் . சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு கடமலைக்குண்டு காவல் ஆய்வாளர் எங்களது தங்கும் விடுதிக்கு வந்தார் . கடமலைக்குண்டு காவல் ஆய்வாளர் தங்கும் விடுதியின் அறையை சோதனை செய்ய வந்தார். காவல் ஆய்வாளர் அங்கு என்ன செய்தார் என்ற நினைவில்லை . என்னிடம் காவல் ஆய்வாளர் கையொப்பம் பெறவில்லை . எங்களது விடுதியில் இருந்த பேரேட்டை எடுத்துச்சென்றார் . பேரேட்டில் யார் தங்கியிருந்தார் , எப்போது தங்கியிருந்தார், எப்போது விடுதியை விட்டு காலி செய்தார் என்ற தகவல்களை பதிவு செய்வோம். காவல் ஆய்வாளர் எதற்காக பேரேட்டை கைப்பற்றி சென்றார் என்று தெரியாது. காவல் ஆய்வாளர் பேரேட்டை கொண்டு வந்து கொடுப்பதாக

எடுத்துச்சென்றார். கொடுத்தாரா என்று தெரியாது. செந்தில் என்ற செந்தில்குமார், அன்பு என்ற அன்பு கணேஷ் ஆகியோரை யார் என்று தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியில் இருப்பதும் என்னுடைய கையொப்பம் ஆகும். கடமலைக்குண்டு காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்க வில்லை. என்னுடன் பேசினார்.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டபடி பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

காவல் ஆய்வாளர் விசாரணையில் 29.02.2020ம் தேதி அதிகாலை 2.45 மணிக்கு, எதிரி மகாராஜனை அழைத்து வந்து மகாராஜன் பெயரில் ஒதுக்கப்பட்டிருந்த அறையில், கன்னியாகுமரி மாவட்டம், வடசேரியை சேர்ந்த ஜெயச்சந்திரன் மகன் செந்தில்குமார் என்ற வெள்ளை செந்தில்குமாரும், விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையை சேர்ந்த அன்பு என்ற அன்பு கணேஷ் தங்கி இருந்ததை கண்டுபிடித்து, காவல் ஆய்வாளர், செந்தில் என்ற வெள்ளை செந்தில்குமாரை விசாரிக்க, அவர் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், காவல் ஆய்வாளர் மடிக்கணினியில் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், மகாராஜனின் மகன் தேவா என்ற தெய்வேந்திரன் அவர்களுக்கு நன்பர் என்றும், தேவா என்ற தெய்வேந்திரன் ,அவரது அக்கா, சிதராவின் கணவரை கொலை செய்யவேண்டும் என்று சொன்னதாகவும், எதிரிகள் ஒப்புக்கொண்டதாகவும், அதனால் தேவா என்ற தெய்வேந்திரன், அன்பு என்ற அன்பு கணேஷ்யையும், செந்தில்குமாரையும், சித்ராவின் கணவர் செல்லப்பாண்டியை

கொலை செய்ய மகாராஜனை சந்திக்க அனுப்பி வைத்ததாகவும் , கடந்த 06.08.2019 ம் தேதி , ராஜா லாட்ஜில் செல்லப்பாண்டியை கொலை செய்ய திட்டம் தீட்டியதாகவும், கொலை செய்ய ரூ.5 லட்சம் கூலி கொடுக்கவேண்டும் என்று பேசி முடித்து, முன் பணமாக ரூ.65 ஆயிரம் பெற்றுக்கொண்டதாகவும் , 08.08.2019 ம் தேதி, சக்திவேல் என்பவர் செல்லப்பாண்டியை ராமநாதபுரத்திற்கு அழைத்து வந்ததாகவும், செல்லப்பாண்டி ராமநாதபுரம் வந்தவுடன் எதிரிகள் சக்திவேல் , தினேஷ், அன்பு என்ற அன்பு கணேஷ் , கிஷோர், நாகராஜன், செந்தில் என்ற வெள்ளை செந்தில்குமார் ஆகியோர் சேர்ந்து , செல்லப்பாண்டியை கொலை செய்து எரித்து, புதைத்து விட்டதாக கூறியதாகவும் , அவர்களை கூட்டிச்சென்றால் , செல்லப்பாண்டியை புதைத்த இடத்தை அடையாளம் காட்டுவதாகவும் , தன்னிடம் இருந்த கத்தியை எடுத்து ஆய்வாளரிடம் ஒப்படைத்ததாகவும் , ஆய்வாளர், கத்தியை மகஜரில் கைப்பற்றியதாகவும் , கூறிவிட்டு, எதிரிகள், எனக்கு வேண்டியவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் தவறு .

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

மனுவின் மீது குறுக்கு விசாரணை நிறுத்திவைக்கப்பட்டது .

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டது. அவரால் சரி என் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது |
| கூடுதல் மாவட்ட விரைவு நீதிபதி<br>தேனி |

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT (FTC), THENI

SC. No. 32/2021

Deposition of Witness : PW8

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்வக்குமார் | த/பெயர் | : குணசேகரன் |
| ஊர் | : மேலப்பட்டி | தாலுகா | : ஆண்டிபட்டி |
| சாதி | : -- | தொழில் | :விவசாயம் |
| மதம் | : இந்து | வயது | :29/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.08.2022

---

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆண்டிபட்டி தாலுகா மேலப்பட்டியில் வசித்து வருகிறேன் . கடந்த 2020ம் ஆண்டு காலை சுமார் 8.30 மணிக்கு தங்கம்மாள் புரத்தில் பேருந்து நிலையத்திற்கு பக்கம் இருந்தேன் . போலீசார் ஒரு நபரை கைது செய்து வைத்திருந்தனர். அவரை விசாரித்தனர். அவர் தன்னுடைய பெயர் சக்திவேல் என்று ஆய்வாளரிடம் கூறினார். அவர் மகாராஜன் என்பவரை பார்க்க வந்திருப்பதாக சொன்னார். மகாராஜனின் மகள் காங்கேயத்தில் டீக்கடை வைத்திருந்ததாகவும் , அதனால் மகாராஜனோடு பழக்கம் ஏற்பட்டதாகவும் , மகாராஜனை பார்க்க வந்து சென்றதாகவும் சொன்னார். அதன் மூலம் சக்திவேலுக்கு செல்லப்பாண்டியுடன் பழக்கம் ஏற்பட்டதாக சொன்னார். சக்திவேலுக்கு பணத்தேவை இருந்ததாகவும் , சக்திவேல் மகாராஜனிடம் பணம் கேட்டதாகவும் , பணத்தை வாங்க மகாராஜன் சக்திவேலை ஊருக்கு வரச்சொன்னதாகவும் , சக்திவேல் வந்து மகாராஜனை பார்க்க மகாராஜன், பணம் கொடுக்க சம்மதித்ததாகவும், பிறதிபலனாக மகாராஜனுக்கு ஒரு வேலையை செய்து கொடுக்க வேண்டுமென்று சொன்னதாகவும் , செல்லப்பாண்டி என்பவர் மகாராஜனுக்கு தொந்தரவாக இருப்பதாகவும் , செல்லப்பாண்டியை தான் சொல்லும் நபரிடம் கொண்டு சேர்க்கவேண்டும் என்று கூறியதாகவும் ,

செல்லப்பாண்டியை சக்திவேல் ராஜா லாட்ஜிற்கு கூட்டிச்சென்றதாகவும் , சக்திவேல் செல்லப்பாண்டியிடம் அவருக்கு பணத்தேவை இருந்தால் அறிமுகம் செய்த நபர்களிடம் வாங்கிக்கொள்ளலாம் என்று சொன்னதாகவும் , தினேஷ், செந்தில்குமார் ஆகியோர் ராஜா லாட்ஜில் தங்கியிருந்ததாகவும் , அவர்களை பைனான்ஸ்காரர்கள் என்று சொல்லி சக்திவேலுக்கு , செல்லப்பாண்டிக்கும் அறிமுகம் செய்து வைத்ததாகவும், சக்திவேல், செல்லப்பாண்டிக்கு தேவையான பணத்தை ராஜா லாடஜில் தங்கியிருந்த , அறிமுகம் செய்யப்பட்ட நபர்கள் கொடுத்துவிடுவார்கள் என்றும், பணத்தை ராமநாட்டிற்கு சென்று வாங்கிக்கொள்ள சொன்னதாகவும் , செல்லப்பாண்டியும், சக்திவேலும் ராமநாட்டிற்கு சென்றதாகவும் , சக்திவேல், செல்லப்பாண்டியை ராமநாட்டில் கூலிப்படை தினேஷ் , செந்தில்குமார் ஒப்படைத்துவிட்டதாகவும், கூலிப்படையினர் எல்லோரும் சேர்ந்து வெட்டி எரித்து புதைத்துவிட்டதாகவும் சொன்னார் . போலீசார் வாக்குமூலத்தை எழுதிக்கொண்டார்கள். நான் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் இட்டேன் . எதிரி சக்திவேல் கையொப்பம் இட்டார் . காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் .

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

மனுவின் மீது குறுக்கு விசாரணை நிறுத்திவைக்கப்பட்டது .

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டது. அவரால் சரி என் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது |
| கூடுதல் மாவட்ட விரைவு நீதிபதி<br>தேனி |